550/3, Dr Nanjappa Road, Gandhipuram, Coimbatore - 641012
☎ 99941 46662 / 99944 27714

SHANMUGAM IAS ACADEMY

# தொல்லியல் கண்டுபிடிப்புகள்

## முந்தைய ஆண்டு வினாக்கள் (2020 – 2026)

TNPSC குரூப் 1, 2, 4 மற்றும் பிற தேர்வுகள் · விடைகள் மற்றும் விளக்கங்களுடன்

**55 வினாக்கள்**

www.shanmugamiasacademy.in

ஒவ்வொரு வினாவின் தொடக்கத்திலும் [ ] அடைப்பில் தேர்வுப் பெயரும் ஆண்டும் கொடுக்கப்பட்டுள்ளன. முதலில் விடைகளைப் பார்க்காமல் முயன்று, பின் பகுதியில் உள்ள விடைகளுடன் சரிபார்க்கவும்.

## வினாக்கள்

**1.** VAS-AHGS-2020 **சங்க காலத்தில், எந்த இடத்தில் ரோமானிய நாணயங்கள் கண்டுபிடிக்கப்பட்டது?**

**(A)** ஆதிச்சநல்லூர் **(B)** அரிக்கமேடு
**(C)** கொற்கை **(D)** புகார்

**2.** ARGS-2020 **பின்வருவனவற்றுள் எது சரியாகப் பொருத்தப்படவில்லை?**

**(A)** மர வளைய கணக்கீடு – ஏ.ஈ. டக்ளஸ் **(B)** வார்வ் காலக் கணிப்பு – பேரன் ஜெரார்ட் டி கீர்
**(C)** பனியுக வார்வ் வரிசை – டபிள்யூ.எஃப். லிப்பி **(D)** கார்பன் 14 கரிப்பகுப்பாய்வு முறை – டபிள்யூ.எஃப். லிப்பி

**3.** AHGS-2021 **பேரரசர் அகஸ்டஸ் காலத்திலேயே ரோமாபுரிக்கும் தென்னிந்தியாவிற்கும் வணிகத் தொடர்புகள் இருந்தது என்பதை ரோமாபுரி நாணயங்களை கவனத்துடன் படித்தபிறகு இக்கூற்றினை வெளிப்படுத்தியவர் ______**

**(A)** தந்தை ஹீராஸ் **(B)** திரு. R. சேவெல்
**(C)** D.D. கோசாம்பி **(D)** முனைவர் U.V. சுவாமிநாத ஐயர்

**4.** AHGS-2021 **தொடக்கத்தில் ரோமானியர்கள் எந்த உலோகத்தில் இந்தியாவிற்கு கொண்டு வரப்பட்ட காசுகளை வெளியிட்டனர்?**

**(A)** செம்பு **(B)** பொன்
**(C)** ஈயம் **(D)** வெள்ளி

**5.** AGGS-2021 **தமிழ்நாட்டில் உள்ளாட்சி அரசாங்கத்தின் வரலாற்றினை ______ மாவட்ட ______ கல்வெட்டுகளின் மூலம் அறியலாம்.**

**(A)** உத்திரமேரூர், காஞ்சிபுரம் **(B)** கீழடி, மதுரை
**(C)** ஆதிச்சநல்லூர், தூத்துக்குடி **(D)** சித்தன்னவாசல், புதுக்கோட்டை

**6.** ADGS-2021 **அகஸ்டஸ் காலத்து நாணயங்கள் ரோமானிய நாட்டுடன் வாணிப உறவு கொண்டு இருந்ததை கண்டறியப்பட்ட இடம்**

**(A)** அரிக்கமேடு **(B)** கோயம்புத்தூர்
**(C)** கரூர் **(D)** ஆதிச்சநல்லூர்

**7.** PSHY-2022 **இந்தியர்களுக்கும் ரோமானியர்களுக்கும் வியாபார தொடர்பு இருந்தது என்று உறுதி கூறிய அரிக்கமேட்டில் கண்டுபிடிக்கப்பட்ட நாணயங்கள் ______ காலத்தில் வெளியிடப்பட்டன.**

**(A)** கோபர்நிகஸ் **(B)** ஜூலியஸ்
**(C)** அகஸ்டஸ் **(D)** ஜஸ்டினியன்

---

**8.** PSHY-2022 **கரிகாலனுக்கு திருப்புமுனையாக இருந்த போர் ______**

**(A)** வெண்ணி **(B)** மகதம்
**(C)** அவந்தி **(D)** வஜ்ரா

---

**9.** TNPSC-2022 **கீழ்க்கண்ட நூல்களில் பாரதிதாசனுடன் தொடர்பில்லாத நூல் எது?**

**(A)** பாண்டியன் பரிசு **(B)** அழகின் சிரிப்பு
**(C)** மலரும் மாலையும் **(D)** இருண்ட வீடு

---

**10.** G2-2022 **எந்த அகழ்வாராய்ச்சி பகுதியில் சர். மோர்டிமர் வீலர் அறிவியல் மற்றும் மண் அடுக்கு முறையைப் பயன்படுத்தினார்?**

**(A)** பல்லாவரம் **(B)** அத்திரம்பாக்கம்
**(C)** அரிக்கமேடு **(D)** காயல்

---

**11.** DPGS-2022 **(i) இந்த இடம் தாமிரபரணி ஆற்றின் கரையில் அமைந்துள்ளது.**
**(ii) தாழிகள் புதைக்கப்பட்ட களம் 114 ஏக்கர் பரப்பளவில் பரவி காணப்படுகிறது.**
**மேற்கூறிய கூற்றுகள் எந்த தொல்பொருள் தளத்தைப் பற்றி விவரிக்கிறது?**

**(A)** ஆதிச்சநல்லூர் **(B)** அரிக்கமேடு
**(C)** கீழவளவு **(D)** கழுகுமலை

---

**12.** G1-2021 **இவ்விடம் மதுரையிலிருந்து தென்கிழக்கு திசையில், 12 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. தமிழகத்தில் வைகை ஆற்றங்கரையில் சங்ககால நகர நாகரிகம் அமைந்திருந்தது பற்றிய உண்மையை பறைசாற்றுகிறது. ஆராய்ச்சியாளரும் ஓய்வு பெற்ற அரசு அதிகாரியுமான திரு. ஆர். பாலகிருஷ்ணன், இங்கு அமைந்திருந்த நாகரிகத்திற்கும் சிந்து சமவெளி நாகரிகத்திற்கும் உள்ள ஒற்றுமைகளை சுட்டிக் காட்டுகிறார்.**
**மேல் குறிப்பிட்டுள்ள இடம் யாது?**

**(A)** அழகன்குளம் **(B)** பொருந்தல்
**(C)** கீழடி **(D)** கொடுமணல்

---

**13.** G1-2022 **அகழ்வு (தொல்பொருள்) ஆராய்ச்சியின் இடம் மற்றும் அவை தரும் தகவல்களோடு சரியானவற்றைப் பொருத்துக :**
**(a) தஞ்சாவூர் அகழ்வாராய்ச்சி – 1. ரோமானிய மட்பாண்டங்கள்**
**(b) கீழையூர் அகழ்வாராய்ச்சி – 2. புத்த மத மையம்**
**(c) திருக்கம்புலியூர் அகழ்வாராய்ச்சி – 3. ரோமானியருக்கும் தமிழர்களுக்கும் இடையே உள்ள வணிக தொடர்பு**
**(d) உறையூர் அகழ்வாராய்ச்சி – 4. காவேரியின் கலாச்சாரம்**

**(A)** 1 2 4 3
**(B)** 3 4 2 1
**(C)** 4 3 1 2
**(D)** 2 3 1 4

---

**14.** G1-2022 **பின்வரும் கல்வெட்டுகளில் எந்தக் கல்வெட்டில் 'மதுரா' என்னும் பழமையான சொல் குறிப்பிடப்பட்டுள்ளது?**
**(a) சித்தர்மலை கல்வெட்டு**
**(b) அழகர்மலை கல்வெட்டு**
**(c) மாமண்டூர் கல்வெட்டு**
**(d) பாத்திபுரலு கல்வெட்டு**

**(A)** (a) மற்றும் (b) மட்டும்
**(B)** (a) மற்றும் (c) மட்டும்
**(C)** (b) மற்றும் (d) மட்டும்
**(D)** (c) மற்றும் (d) மட்டும்

---

**15.** GEOLOGY-2023 **எந்தப் புதைபொருளாராய்ச்சி, தமிழகத்திற்கும் ரோமாபுரிக்கும் இடையிட்ட கடல் வாணிகத்தின் விரிவையும் வளத்தையும் பெரிதும் விளக்கிக் காட்டுகின்றது?**

**(A)** கீழடி
**(B)** அரிக்கமேடு
**(C)** மௌரியக்குடி
**(D)** செங்கல்பட்டு

---

**16.** CESS-2023, CESGS-2023 **சரியான கூற்றை தேர்ந்தெடுக்கவும் :**
**(i) புதுக்கோட்டை மாவட்டத்தின் பொற்பனைக்கோட்டை என்ற இடத்தில் சங்ககால நடுகற்கள் காணப்படுகின்றன.**
**(ii) அரிக்கமேடு என்ற இடம் சங்க காலத் துறைமுகப்பட்டினம் ஆகும்.**
**(iii) இந்திய கருவூலம் மற்றும் புதையல் சட்டம் 1878 இல் வகுக்கப்பட்டுள்ளது.**
**(iv) ரோமானிய நாணயங்கள் தென்னிந்தியாவில் திருநெல்வேலி மண்டலங்களில் செறிந்து காணப்படுகின்றன.**

**(A)** (i), (ii) மற்றும் (iv) சரி
**(B)** (i), (ii) மற்றும் (iii) சரி
**(C)** (ii), (iii) சரி
**(D)** (ii) மற்றும் (iv) சரி

---

**17.** LIBRARY-2023 **பின்வருபவர்களுள் அரிக்கமேடு அகழ்வாய்வினை மேற்கொண்டவர் யார்?**

**(A)** K. ராஜன்
**(B)** மார்டிமர் வீலர்
**(C)** S.R. ராவ்
**(D)** அலெக்ஸாண்டர் ரியா

**18.** DEO-2023 **வரிசை I-ல் காணும் தொல்லியல் ஆய்வு இடங்களை வரிசை II-ல் உள்ள அவற்றின் மாவட்டங்களுடன் பொருத்துக.**

(a) கொடுமணல் – 1. தூத்துக்குடி
(b) பொருந்தல் – 2. விழுப்புரம்
(c) திருவக்கரை – 3. ஈரோடு
(d) ஆதிச்சநல்லூர் – 4. திண்டுக்கல்

**(A)** 1 3 2 4
**(B)** 3 4 2 1
**(C)** 3 4 1 2
**(D)** 1 2 4 3

**19.** DEO-2023 **கீழ்க்காணும் பத்தியைக் கவனமாக படித்து, சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும். இந்த ஊர் திருநெல்வேலி மாவட்டத்தில் நம்பி ஆற்றின் இடது கரையில் அமைந்துள்ளது. நம்பி ஆற்றங்கரையில் இரும்புக்கால கலாச்சாரத்தின் வேர்களை தேடுவதற்காக ஒரு அகழ்வாராய்ச்சி மேற்கொள்ளப்பட்டது. இது பழங்கால பொருட்களுக்கு பெயர் பெற்ற ஒரு செழிப்பான தொல்லியல் இடம். இவ்விடத்தின் பெயர்**

**(A)** துலுக்கர்பட்டி
**(B)** கீழடி
**(C)** வெம்பக்கோட்டை
**(D)** பெரம்பலூர்

**20.** DEO-2023 **எந்தத் தொல்பொருள் ஆராய்ச்சியாளர் முதலில் பாண்டியர்களின் முத்துச் சந்தையைக் கண்டுபிடித்தார்?**

**(A)** நாகசாமி
**(B)** கால்டுவெல்
**(C)** கே.வி. ராமன்
**(D)** எஸ். பரணவிதான

**21.** HEALTH-OFFICER-2023 **குடுமியான்மலை கல்வெட்டில் காணப்படும் 'பரிவாதனி' என்ற சொல் எதைக் குறிப்பிடுகின்றது?**

**(A)** ஒரு ஆசிரியர்
**(B)** ஒரு ராகம்
**(C)** வீணை
**(D)** மிருதங்கம்

**22.** HEALTH-OFFICER-2023 **தமிழகத்தில் எங்கு காலத்தால் முந்திய நுண்கற்கால நினைவுச் சின்னங்கள் கிடைத்தன?**

**(A)** செங்கல்பட்டு
**(B)** தஞ்சாவூர்
**(C)** திருவண்ணாமலை
**(D)** தூத்துக்குடி

**23.** BURSAR-2023 **குடுமியான்மலை கல்வெட்டு _______ பற்றி விளக்குகின்றது**

**(A)** இசை
**(B)** நாடகம்
**(C)** கிராம ஆட்சி முறை
**(D)** நடனம்

**24.** BURSAR-2023 **பின்வருவனவற்றுள் சரியானதை பொருத்துக:**

**(1) பெரும்பாலை – தருமபுரி மாவட்டம்**

**(2) மயிலாடும்பாறை – தூத்துக்குடி மாவட்டம்**

**(3) சிவகளை – கிருஷ்ணகிரி மாவட்டம்**

**(4) துலுக்கர்பட்டி – திருநெல்வேலி மாவட்டம்**

**(A)** 1 மற்றும் 4 சரி
**(B)** 2 மற்றும் 3 சரி
**(C)** 1 மற்றும் 2 சரி
**(D)** 3 மற்றும் 4 சரி

---

**25.** BURSAR-2023 **ஒவாமலை தொல்லியல் இடம் எங்கு அமைந்துள்ளது?**

**(A)** மதுரை
**(B)** திருநெல்வேலி
**(C)** சிவகங்கை
**(D)** தஞ்சாவூர்

---

**26.** BURSAR-2023 **அத்திரம்பாக்கத்தில் கண்டுபிடிக்கப்பட்ட கற்கருவிகள் ______ காலத்தைச் சார்ந்தவை**

**(A)** பழைய கற்காலம்
**(B)** புதிய கற்காலம்
**(C)** இடை கற்காலம்
**(D)** பெருங் கற்காலம்

---

**27.** BURSAR-2023 **தொல்பொருள் ஆராய்ச்சி இடங்களைப் பொருத்துக:**

**(a) ஆதிச்சநல்லூர் – 1. சிவகங்கை**

**(b) மாங்குளம் – 2. தூத்துக்குடி**

**(c) கொடுமணல் – 3. மதுரை**

**(d) கீழடி – 4. ஈரோடு**

**(A)** 2 3 4 1
**(B)** 3 4 2 1
**(C)** 4 3 1 2
**(D)** 2 3 1 4

---

**28.** CSSE-SI-FISHERIES-2023 **கீழ்க்காணும் கூற்றுகளில் கீழடியைப் பற்றிய சரியான கூற்றுகள் எவை?**

**(i) செங்கல் கட்டுமானங்கள்**

**(ii) தமிழ்-பிராமி எழுத்துகள் கொண்ட மட்கல ஓடுகள்**

**(iii) கண்ணுக்கு மை தீட்டும் செப்புக் கம்பி**

**(iv) பதிற்றுப்பத்தில் கீழடியைப் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது**

**(A)** (i), (ii) மற்றும் (iv) சரி
**(B)** (i), (ii), (iii) மற்றும் (iv) அனைத்தும் சரி
**(C)** (i), (ii) மற்றும் (iii) சரி
**(D)** (ii) மற்றும் (iv) சரி

---

**29.** ACF-2023, ADGS-2021 **தமிழ்நாட்டில் பல்லாவரத்தில் முதன்முதலில் பழைய கற்காலக் கருவியை கண்டுபிடித்தவர்**

**(A)** இராபர்ட் புரூஸ் ஃபூட்
**(B)** அலெக்சாண்டர் பிளெமிங்
**(C)** ஜோசப் ப்ரெஸ்ட்விச்
**(D)** ஹென்றி ஜியோகியன்

---

**30.** ACF-2023 **தமிழகத்தில் எங்கு வழவழப்பாக்கப்பட்ட கற்கருவிகள் பெருமளவில் கிடைத்தன?**

**(A)** பையம்பள்ளி
**(B)** புதுக்கோட்டை
**(C)** திருநெல்வேலி
**(D)** திருவண்ணாமலை

**31.** RA-ANIMAL-HUSBANDRY-2023, FISHERIES-INSPECTOR-2023 **இலக்கிய சான்றுகளுடன் தொல்லியல் துறையால் உறுதி செய்யப்பட்ட முதலாம் நூற்றாண்டைச் சேர்ந்த 'ரோமானிய தொழிற்சாலை' பாண்டிச்சேரியின் அருகில் இருந்தது உறுதி செய்யப்பட்டது. அவ்விடம் எங்கே அமையப் பெற்றுள்ளது?**

**(A)** அரிக்கமேடு
**(B)** பூம்புகார்
**(C)** மகாபலிபுரம்
**(D)** கொடுமணல்

**32.** MASS-INTERVIEWER-2023 **கி.பி. இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த இசை ஸ்வரங்கள் அடங்கிய பிராமி கல்வெட்டு எங்கு கண்டுபிடிக்கப்பட்டது?**

**(A)** அரச்சலூர்
**(B)** அரிக்கமேடு
**(C)** ஆதிச்சநல்லூர்
**(D)** வனகிரி

**33.** COMBINED-ACCOUNTS-2024 **ஆதிச்சநல்லூர் தாழிகள் புதைத்த இடத்தைக் கண்டுபிடித்தவர் யார்?**

**(A)** புரூஸ் ஃபூட்
**(B)** ஜகோர்
**(C)** சாகர்
**(D)** கன்னிங்ஹாம்

**34.** GROUP-1-2024 **அரிக்கமேடு தொல்லியல் ஆய்வுகளின் கூற்றுகளில் கீழ்கண்டவைகளில் சரியானது எது?**
**(1) அரிக்கமேடு தஞ்சாவூர் மாவட்டத்தில் அமைந்துள்ளது**
**(2) இது ஒரு சோழர்களின் துறைமுகம்**
**(3) இத்துறைமுகம் ரோம் நாட்டுடன் வாணிப உறவு கொண்டிருந்தது**
**(4) அரிக்கமேடு துறைமுகம் காவேரிப்பட்டணம், அழகன்குளம் மற்றும் முசிறி துறைமுகங்களுடன் நெருங்கிய வணிகத் தொடர்பு கொண்டிருந்தது**

**(A)** (1), (2) சரி; (3), (4) தவறு
**(B)** (1), (2), (3) சரி; (4) தவறு
**(C)** (2), (3), (4) சரி; (1) தவறு
**(D)** (1), (3), (4) சரி; (2) தவறு

**35.** CTS-ITI-2024 **கீழடியில் _______ எழுத்துப் பொறிப்புகள் கொண்ட பானை ஓடுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.**

**(A)** தமிழ் – ஆயுத எழுத்து
**(B)** தமிழ் – மெய் எழுத்து
**(C)** தமிழ் – உயிர்மெய் எழுத்து
**(D)** தமிழ் – பிராமி எழுத்து

**36.** Group 1B&C-2024 **தொல்லியல் அகழ்வாய்வு நடந்துள்ள கீழடி அமைந்துள்ள மாவட்டம்**

**(A)** திருநெல்வேலி
**(B)** புதுக்கோட்டை
**(C)** சிவகங்கை
**(D)** மதுரை

**37.** Group 1B&C-2024 **கூற்று [A] : இரும்பில் கருவிகள் செய்தோர் குறித்து சங்க இலக்கியத்தில் குறிப்புகள் உள்ளன.**
**காரணம் [R] : கொடுமணலிலும், குட்டூரிலும் இரும்பு உருக்கு உலைகள் அகழாய்வில் வெளிப்பட்டுள்ளன.**

**(A)** கூற்று [A] சரி, ஆனால் காரணம் [R] தவறு
**(B)** கூற்று [A], காரணம் [R] இரண்டும் சரி, காரணம் [R] கூற்றை [A] சரியாக மெய்ப்பிக்கிறது
**(C)** கூற்று [A] தவறு, காரணம் [R] சரி
**(D)** கூற்று [A], காரணம் [R] இரண்டும் சரி, ஆனால் காரணம் [R] கூற்றை [A] சரியாக மெய்ப்பிக்கவில்லை

**38.** Special Competitive Exam-2025 **ஆதிச்சநல்லூர் அகழ்வாய்வு மாதிரிகள் தற்பொழுது ______ அருங்காட்சியகத்தில் உள்ளன.**

**(A)** லண்டன்
**(B)** பெர்லின்
**(C)** திருநெல்வேலி
**(D)** மதுரை

**39.** Group 1&1A-2025 **அகழாய்வில் கிடைத்தப் பொருட்களையும், அகழாய்வு செய்யப்பட்ட இடத்தையும் பொருத்துக.**
**(a) சங்கு வளையல்கள் – 1. அழகன்குளம்**
**(b) உறை கிணறு – 2. துலுக்கர்பட்டி**
**(c) ரோம் நாணயங்கள் – 3. கீழடி**
**(d) வெள்ளி அச்சு – 4. வெம்பக்கோட்டை**

**(A)** 2 1 3 4
**(B)** 4 3 1 2
**(C)** 3 2 1 4
**(D)** 1 4 2 3

**40.** Group 1&1A-2025 **பின்வருவனவற்றுள் சரியானவற்றைக் கண்டறிக.**
**(i) அசோகர் எழுத்துப் பொறிகள் மைசூர் பிராந்தியத்தில் பிரம்மகிரியில் கிடைக்கின்றது.**
**(ii) சின்னமனூர்ச் செப்பேடு தலையாலங்கானத்துப் பாண்டியன் நெடுஞ்செழியனைக் குறிப்பிடுகின்றது.**
**(iii) தி.ஆ. கோபிநாதநாயர் பதிப்பித்த திருக்கோவிலூர் எழுத்துப்பொறி ஔவை உயிர் துறந்ததைக் குறிப்பிடுகின்றது.**
**(iv) கி.பி. 10 ஆம் நூற்றாண்டு வரையில் கன்னட நாட்டில் வீரக்கல் கிடைக்கவில்லை.**

**(A)** (i) மற்றும் (iii) மட்டும் சரி
**(B)** (ii) மற்றும் (iv) மட்டும் சரி
**(C)** (i) மற்றும் (ii) மட்டும் சரி
**(D)** (iii) மற்றும் (iv) மட்டும் சரி

**41.** Group 1&1A-2025 பொருத்துக :
தமிழகத்தில் அகழாய்வு மேற்கொள்ளப்பட்ட இடங்கள்
(a) சென்னை – 1. மல்லபாடி
(b) தஞ்சாவூர் – 2. கம்பர்மேடு
(c) தர்மபுரி – 3. கொடுமணல்
(d) ஈரோடு – 4. பல்லாவரம்

**(A)** 4 2 1 3 **(B)** 2 1 3 4
**(C)** 3 1 2 4 **(D)** 4 1 2 3

---

**42.** Group 4-2025 பின்வருவனவற்றுள் அகழ்வாராய்ச்சி நடைபெற்ற ஊர்களை அவ்வூர் அமைந்துள்ள மாவட்டத்துடன் பொருத்திக் காட்டுக.
(a) அழகன்குளம் – 1. சிவகங்கை
(b) வசவசமுத்திரம் – 2. ஈரோடு
(c) கொடுமணல் – 3. காஞ்சிபுரம்
(d) கீழடி – 4. இராமநாதபுரம்

**(A)** 1 4 3 2 **(B)** 4 2 3 1
**(C)** 3 1 2 4 **(D)** 4 3 2 1

---

**43.** CTS (IV Post)-2025 கீழ்க்காணும் தொடர்களில் கொடுமணல் பற்றி சரியானவற்றைத் தேர்வு செய்க.
(1) சங்க இலக்கியமான பதிற்றுப்பத்தில் கொடுமணல் குறித்து குறிப்பு உள்ளது
(2) கொடுமணல் திருச்சிக்கு அருகில் உள்ளது
(3) பெருங்கற்கால முதுமக்கள் தாழிகளும், இரும்பு மணிக் கற்கள், சங்கு வேலைபாடுகள் குறித்த சான்றும் கொடுமணலில் கிடைத்துள்ளன

**(A)** (1) மட்டும் சரி **(B)** (1) மற்றும் (3) சரி
**(C)** (1) மற்றும் (2) சரி **(D)** (2) மற்றும் (3) சரி

---

**44.** CTS (IV Post)-2025 தமிழ்நாடு பழங்கற்கால மனிதன் வாழ்ந்த தொன்மையான பகுதிகளைக் கொண்டுள்ளது என்பதை உலகிற்கு உணர்த்தியவர் யார்?

**(A)** கசால் **(B)** இராபர்ட் புரூஸ் புட்
**(C)** பிறிக்ஸ் **(D)** சர் மார்டிமர் வீலர்

---

**45.** CTS (Non IV Post)-2025 அகழாய்வு இடங்களையும் அகழாய்வாளர்களையும் சரியாகப் பொருத்துக :
(a) பூம்புகார் அகழாய்வு – 1. H. சுப்பராயலு
(b) வெள்ளலூர் அகழாய்வு – 2. நடன காசிநாதன்
(c) கொடுமணல் அகழாய்வு – 3. R. நாகசாமி
(d) கரூர் அகழாய்வு – 4. பூங்குன்றன்

**(A)** 2 4 1 3 **(B)** 4 2 3 1
**(C)** 3 4 1 2 **(D)** 1 2 3 4

---

**46.** Group 2&2A-2025 **சரியான பொருத்தங்களை தேர்ந்தெடுக்கவும்.**
(1) காவேரிப்பாக்கம் கல்வெட்டு – வரகுணா
(2) திருமுக்கூடல் கல்வெட்டு – வீரராஜேந்திரா
(3) திருவாலங்காடு செப்பேடு – முதலாம் ராஜேந்திரா
(4) உத்திரமேரூர் கல்வெட்டு – முதலாம் பராந்தகா

**(A)** (1) மற்றும் (2) சரி
**(B)** (3) மற்றும் (4) சரி
**(C)** (2), (3) மற்றும் (4) சரி
**(D)** (1), (2) மற்றும் (3) சரி

---

**47.** CTS-ITI-LEVEL-II-2025 **தமிழ்நாட்டில் சங்ககால மக்களின் வாழ்க்கை முறைக்கான பலவகையான தொல்லியல் சான்றுகள் கிடைத்திருக்கக்கூடிய இடங்களில் எது தவறானது?**
(1) வசவசமுத்திரம்
(2) பட்டணம்
(3) காவிரிப்பூம்பட்டினம்
(4) கொடுமணல்

**(A)** (1) மட்டும்
**(B)** (2) மட்டும்
**(C)** (1), (3) மற்றும் (4) மட்டும்
**(D)** (1), (2) மற்றும் (4) மட்டும்

---

**48.** APP-GR-II-2026 **பின்வரும் கூற்று மற்றும் காரணத்தைப் படித்து, கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீட்டிலிருந்து சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.**
கூற்று [A]: தமிழர்கள் கி.மு. 6 ஆம் நூற்றாண்டில் எழுத்தறிவு அல்லது எழுத்துக் கலையைக் கற்றறிந்திருந்தனர்.
காரணம் [R]: கொடுமணல் மற்றும் பொருந்தலில் கண்டெடுக்கப்பட்ட பொருட்களிலிருந்து பெறப்பட்ட அறிவியல் தேதிகள், தமிழ் பிராமியின் காலத்தை கி.மு. 6 ஆம் நூற்றாண்டு எனக் காட்டுகின்றன.

**(A)** [A] சரி ஆனால் [R] தவறு
**(B)** [A] தவறு ஆனால் [R] சரி
**(C)** [A] மற்றும் [R] இரண்டும் சரி மற்றும் [R] என்பது [A]ன் சரியான விளக்கம்
**(D)** [A] மற்றும் [R] இரண்டும் சரி ஆனால் [R] என்பது [A]ன் சரியான விளக்கம் அல்ல

---

**49.** APP-GR-II-2026 **பின்வருவனவற்றில் சரியான பொருத்தத்தைத் தேர்ந்தெடுக்கவும்.**
(1) ராபர்ட் புரூஸ் புட் – ஆதிச்சநல்லூர் தொல்பொருள் ஆய்வாளர்
(2) அலெக்ஸாண்டர் கன்னிங்காம் – பல்லாவரம் தொல்பொருள் ஆய்வாளர்
(3) ஆண்டிரியாஸ் பெடார் ஜாகர் – பிரிட்டிஷ் இராணுவப் பொறியாளர்
(4) ஸ்டுவர்ட் – ஆட்சியர்

**(A)** (4) மட்டும்
**(B)** (3) மட்டும்
**(C)** (1), (3) மட்டும்
**(D)** (3), (4) மட்டும்

---

**50.** APP-GR-II-2026 **புகளூருக்கு அருகாமையில் ஆறுநாட்டார்மலை எனும் இடத்தில் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டில் எந்த மன்னன் சமண துறவிகளுக்கு அர்ப்பணிப்பு செய்துள்ளமை பதிவாகியுள்ளது?**

**(A)** இளம் கடுங்கோ
**(B)** முதலாம் நெடுஞ்செழியன்
**(C)** முதலாம் ராஜேந்திரன்
**(D)** இரண்டாம் நெடுஞ்செழியன்

**51.** CTS-IV-POST-2026, TNPSC-2022 **கூற்று [A]: கிறித்துவ சகாப்தத்தின் தொடக்க நூற்றாண்டுகளில் இந்தியா ரோமானியப் பேரரசுடன் கடல்சார் வர்த்தகம் மேற்கொண்டிருந்தது.**
**காரணம் [R]: அரிக்கமேடு அகழ்வாராய்ச்சியில் ஏராளமான ரோமானிய நாணயங்கள் கிடைத்துள்ளன.**

**(A)** [A] மற்றும் [R] ஆகிய இரண்டும் சரி மற்றும் [R] என்பது [A] விற்குச் சரியான விளக்கமாகும்
**(B)** [A] மற்றும் [R] ஆகிய இரண்டும் சரி ஆனால் [R] என்பது [A] விற்குச் சரியான விளக்கமல்ல
**(C)** [A] சரி ஆனால் [R] தவறு
**(D)** [A] தவறு ஆனால் [R] சரி

---

**52.** CTS-IV-POST-2026 **அகழாய்வு தளத்தை அதன் முக்கியத்துவத்தோடு சரியாக பொருத்துக.**
**(a) ஆனமலை – 1. நீர்ப்பாசன அமைப்பின் கட்டுமான முறை**
**(b) திருத்தங்கல் – 2. புதைக்கப்பட்ட வகை மற்றும் புதைக்கப்பட்ட தொல்பொருட்கள்**
**(c) கன்னனூர் – 3. மதுரையில் பெருங்கற்கால கலாச்சாரத்தின் இருப்பு**
**(d) கோவலன்பொட்டல் – 4. பெருங்கற்கால மற்றும் நுண்கற்கால காலங்களின் தொல்பொருட்கள்**

**(A)** 3 4 1 2
**(B)** 2 4 1 3
**(C)** 4 2 1 3
**(D)** 1 4 3 2

---

**53.** GROUP-2A-MAINS-2025 **கீழ்க்காணும் கூற்றுகளை ஆராய்ந்து சரியான கூற்று/கூற்றுகளை தேர்ந்தெடுக்கவும்.**
**(a) திட்டமிட்ட நகரம், தானியக் கிடங்கு மற்றும் உறை கிணறுகள் அரிக்கமேட்டில் கண்டெடுக்கப்பட்டன**
**(b) சேரர்கள் காவேரி டெல்டா பகுதியை ஆட்சி செய்தனர். அவர்களின் தலைநகரம் உறையூர் ஆகும்**
**(c) சோழர்களின் சின்னம் புலி ஆகும். அவர்கள் புலி உருவம் பொறித்த சதுர வடிவிலான செம்பு நாணயங்களை வெளியிட்டார்கள்**
**(d) சங்க காலம் வெண்கலக் காலத்தில் இருந்து வேரூன்றத் தொடங்கியது**

**(A)** (a) சரி
**(B)** (b) சரி
**(C)** (a) மற்றும் (c) சரி
**(D)** (a), (c) மற்றும் (d) சரி

---

**54.** GROUP-2A-MAINS-RE-2026 **கி.மு 6-ஆம் நூற்றாண்டில் மக்கள் எழுத்தறிவு பெற்றவர்களாக விளங்கினர். காரணம்,**
**(1) கீழடியில் கிடைத்த பானையில் 'தமிழி எழுத்துகள்' பொறிக்கப்பட்டுள்ளன.**
**(2) கீழடியில் கிடைத்த பெரும்பாலான பானைகளில் பானை உலர்ந்த பின்னர் எழுத்துகள் பொறிக்கப்பட்டுள்ளன.**
**(3) கீழடியில் கிடைத்த கருப்பு, சிவப்பு நிறப் பானைகளில் கடவுள் உருவம் பொறிக்கப்பட்டிருந்தன.**
**(4) பானையில் எழுதப்பட்ட எழுத்துகள் ஒரே எழுத்தமைதியில் இருந்தன.**

**(A)** (1) மட்டும் சரி
**(B)** (2) மட்டும் சரி
**(C)** (3) மற்றும் (4) சரி
**(D)** (1) மற்றும் (2) சரி

550/3, Dr Nanjappa Road, Gandhipuram, Coimbatore - 641012
☎ 99941 46662 / 99944 27714

**55.** GROUP-2A-MAINS-REVOKED-2026 **அரிக்கமேடு:**

**(1) புதுச்சேரிக்குத் தெற்கில் இரண்டரை மைல் தொலைவில் உள்ள அகழ்வாராய்ச்சிக் களம்**

**(2) முதன் முதலாக 1945 ஆம் ஆண்டு, அறிவியல் அடிப்படையில் அகழ்வாராய்ச்சி நடைபெற்ற இடம்**

**(3) புகழ்பெற்ற சுற்றுலாத் தலம்**

**(4) நவீன அறிவியல் நகரம்**

**(A)** (1) மட்டும் சரி
**(B)** (2) மற்றும் (3) சரி
**(C)** (1) மற்றும் (4) சரி
**(D)** (1) மற்றும் (2) சரி

# விடைகள் மற்றும் விளக்கங்கள்

1. **(B) அரிக்கமேடு**
அரிக்கமேடு (புதுச்சேரி அருகே) சங்ககால ரோமானிய வணிகத் தளம்; இங்கு ரோமானிய நாணயங்கள், மட்பாண்டங்கள், மதுக்குடுவைகள் கிடைத்துள்ளன.

2. **(C) பனியுக வார்வ் வரிசை – டபிள்யூ.எஃப். லிப்பி**
பனியுக வார்வ் வரிசை முறையை உருவாக்கியவர் ஜெரார்ட் டி கீர்; டபிள்யூ.எஃப். லிப்பி கார்பன்-14 காலக்கணிப்பு முறையைக் கண்டறிந்தவர்.

3. **(B) திரு. R. சேவெல்**
ராபர்ட் சேவெல் தென்னிந்தியாவில் கிடைத்த ரோமானிய நாணயங்களை ஆய்வு செய்து (1904) அகஸ்டஸ் காலத்திலேயே வணிகம் தொடங்கியதை நிறுவினார்.

4. **(D) வெள்ளி**
தமிழகத்தில் கிடைத்த தொடக்ககால ரோமானிய நாணயங்கள் பெரும்பாலும் அகஸ்டஸ், டைபீரியஸ் காலத்து வெள்ளி டெனாரியஸ் நாணயங்கள் ஆகும்.

5. **(A) உத்திரமேரூர், காஞ்சிபுரம்**
காஞ்சிபுரம் மாவட்ட உத்திரமேரூர் கல்வெட்டுகள் (முதலாம் பராந்தக சோழன் காலம்) குடவோலை முறை மூலம் சபை உறுப்பினர் தேர்வை விவரிக்கின்றன.

6. **(A) அரிக்கமேடு**
அரிக்கமேட்டில் கிடைத்த அகஸ்டஸ் கால நாணயங்களும் ரோமானியப் பொருட்களும் ரோமுடனான வணிகத் தொடர்பை உறுதிப்படுத்துகின்றன.

7. **(C) அகஸ்டஸ்**
அரிக்கமேட்டில் கிடைத்த ரோமானிய நாணயங்கள் பேரரசர் அகஸ்டஸ் காலத்தவை.

8. **(A) வெண்ணி**
வெண்ணிப் போரில் கரிகாலன் சேர, பாண்டியர் மற்றும் பதினொரு வேளிர் கூட்டணியை வென்றான்; இது அவன் வாழ்வின் திருப்புமுனை.

9. **(C) மலரும் மாலையும்**
'மலரும் மாலையும்' கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையின் நூல்; மற்ற மூன்றும் பாரதிதாசன் படைப்புகள்.

10. **(C) அரிக்கமேடு**
1945 இல் மோர்டிமர் வீலர் அரிக்கமேட்டில் மண் அடுக்கு (stratigraphy) முறையில் அறிவியல் அகழாய்வு மேற்கொண்டார்.

11. **(A) ஆதிச்சநல்லூர்**
தூத்துக்குடி மாவட்டத்தில் தாமிரபரணிக் கரையில் உள்ள ஆதிச்சநல்லூரில் 114 ஏக்கர் பரப்பில் முதுமக்கள் தாழி இடுகாடு உள்ளது.

**12. (C) கீழடி**

மதுரைக்குத் தென்கிழக்கே சுமார் 12 கி.மீ. தொலைவில் வைகைக் கரையில் உள்ள கீழடி சங்ககால நகர நாகரிகத்திற்குச் சான்றாகும்.

**13. (A) 1 2 4 3**

கீழையூர் (பூம்புகார் அருகே) புத்த விகாரை மையம்; திருக்கம்புலியூர் காவிரிக்கரைப் பண்பாட்டையும், உறையூர் ரோம்–தமிழக வணிகத் தொடர்பையும் காட்டுகின்றன; தஞ்சாவூரில் ரோமானிய மட்பாண்டங்கள் கிடைத்தன.

**14. (A) (a) மற்றும் (b) மட்டும்**

மதுரை அருகிலுள்ள சித்தர்மலை, அழகர்மலை தமிழ்-பிராமி கல்வெட்டுகளில் 'மதிரை' (மதுரை) என்ற சொல் இடம்பெறுகிறது.

**15. (B) அரிக்கமேடு**

அரிக்கமேடு ரோமானியக் கடல் வணிகத் துறைமுகம்; அங்கு ரோமானிய மட்பாண்டங்கள், மதுக்குடுவைகள், நாணயங்கள் கிடைத்துள்ளன.

**16. (B) (i), (ii) மற்றும் (iii) சரி**

பொற்பனைக்கோட்டையில் சங்ககால நடுகல் உள்ளது; அரிக்கமேடு சங்ககாலத் துறைமுகம்; இந்திய புதையல் சட்டம் 1878 இல் இயற்றப்பட்டது. ரோமானிய நாணயங்கள் அதிகம் கிடைத்தது கோயம்புத்தூர் (கொங்கு) பகுதியில், திருநெல்வேலியில் அல்ல; எனவே (iv) தவறு.

**17. (B) மார்டிமர் வீலர்**

1945 இல் சர் மார்டிமர் வீலர் அரிக்கமேட்டில் அகழாய்வு நடத்தி அதை இந்தோ-ரோமானிய வணிகத் தளமாக நிறுவினார்.

**18. (B) 3 4 2 1**

கொடுமணல் – ஈரோடு, பொருந்தல் – திண்டுக்கல், திருவக்கரை – விழுப்புரம், ஆதிச்சநல்லூர் – தூத்துக்குடி.

**19. (A) துலுக்கர்பட்டி**

துலுக்கர்பட்டி திருநெல்வேலி மாவட்டத்தில் நம்பி ஆற்றின் இடது கரையில் உள்ளது; இரும்புக்கால பண்பாட்டைத் தேட தமிழ்நாடு தொல்லியல் துறை இங்கு அகழாய்வு செய்தது.

**20. (B) கால்டுவெல்**

பாண்டியர்களின் முத்துத் துறைமுகமான கொற்கையில் 1876-இல் முதன்முதலில் அகழாய்வு செய்தவர் ராபர்ட் கால்டுவெல் ஆவார்.

**21. (C) வீணை**

குடுமியான்மலை இசைக் கல்வெட்டில் 'பரிவாதனி' என்பது ஏழு நரம்புகள் கொண்ட ஒரு வகை வீணையைக் குறிக்கிறது.

**22. (D) தூத்துக்குடி**

தூத்துக்குடி மாவட்டத்தின் தேரி (செம்மணல் குன்று) பகுதிகளில், குறிப்பாக சாயர்புரம் அருகே, மிகப் பழமையான நுண்கற்கருவிகள் கண்டெடுக்கப்பட்டன.

**23.** **(A) இசை**

புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள குடுமியான்மலை கல்வெட்டு இசைக் குறியீடுகளை (ஸ்வரங்களை) விளக்கும் புகழ்பெற்ற இசைக் கல்வெட்டு ஆகும்.

**24.** **(A) 1 மற்றும் 4 சரி**

பெரும்பாலை தருமபுரியிலும், துலுக்கர்பட்டி திருநெல்வேலியிலும் உள்ளன; மயிலாடும்பாறை கிருஷ்ணகிரியிலும், சிவகளை தூத்துக்குடியிலும் உள்ளன.

**25.** **(A) மதுரை**

ஒவாமலை மதுரை மாவட்டம் மாங்குளம் அருகே உள்ளது; இங்கு பழமையான தமிழ்-பிராமி கல்வெட்டுகள் உள்ளன.

**26.** **(A) பழைய கற்காலம்**

அத்திரம்பாக்கத்தில் (திருவள்ளூர்) சுமார் 15 லட்சம் ஆண்டுகள் பழமையான அச்சூலியன் கைக்கோடாரிகள் கிடைத்தன; இவை பழைய கற்காலத்தைச் சேர்ந்தவை. (தேர்வாணைய விடைக்குறிப்பில் 'இடைக் கற்காலம்' எனக் குறிக்கப்பட்டிருந்தது.)

**27.** **(A) 2 3 4 1**

ஆதிச்சநல்லூர் – தூத்துக்குடி, மாங்குளம் – மதுரை, கொடுமணல் – ஈரோடு, கீழடி – சிவகங்கை.

**28.** **(C) (i), (ii) மற்றும் (iii) சரி**

கீழடியில் செங்கல் கட்டடங்கள், தமிழ்-பிராமி பொறித்த பானை ஓடுகள், கண் மை தீட்டும் செப்புக் கம்பிகள் கிடைத்தன; ஆனால் பதிற்றுப்பத்தில் கீழடி குறிப்பிடப்படவில்லை.

**29.** **(A) இராபர்ட் புரூஸ் ஃபூட்**

1863-இல் சென்னை அருகே பல்லாவரத்தில் இராபர்ட் புரூஸ் ஃபூட் இந்தியாவின் முதல் பழைய கற்காலக் கைக்கோடாரியைக் கண்டுபிடித்தார்.

**30.** **(A) பையம்பள்ளி**

பையம்பள்ளி ஒரு முக்கிய புதிய கற்கால இடம்; இங்கு வழவழப்பாக்கப்பட்ட கற்கோடரிகள் பெருமளவில் கிடைத்தன.

**31.** **(A) அரிக்கமேடு**

புதுச்சேரி அருகே அரிக்கமேட்டில் கி.பி. முதலாம் நூற்றாண்டு ரோமானிய வணிக மையம் இருந்ததை வீலரின் அகழாய்வு உறுதி செய்தது.

**32.** **(A) அரச்சலூர்**

ஈரோடு மாவட்டம் அரச்சலூரில் உள்ள கி.பி. 2-ஆம் நூற்றாண்டு தமிழ்-பிராமி கல்வெட்டில் இசை / நடன எழுத்துகள் (ஸ்வரங்கள்) பொறிக்கப்பட்டுள்ளன.

**33.** **(B) ஜகோர்**

1876-இல் ஜெர்மானிய ஆய்வாளர் ஜகோர் ஆதிச்சநல்லூர் தாழிப் புதைவிடத்தை முதன்முதலில் கண்டறிந்து அகழ்ந்தார்.

**34.** **(C) (2), (3), (4) சரி; (1) தவறு**

அரிக்கமேடு புதுச்சேரி அருகே உள்ளது, தஞ்சாவூரில் அல்ல; இது சோழர் துறைமுகமாக ரோமுடனும் காவேரிப்பட்டணம், அழகன்குளம், முசிறியுடனும் வணிகம் செய்தது.

**35. (D) தமிழ் – பிராமி எழுத்து**

கீழடியில் தமிழ்-பிராமி (தமிழி) எழுத்துகள் பொறிக்கப்பட்ட நூற்றுக்கணக்கான பானை ஓடுகள் கிடைத்துள்ளன; இவை தமிழரின் தொன்மையான எழுத்தறிவைக் காட்டுகின்றன.

**36. (C) சிவகங்கை**

கீழடி சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் வட்டத்தில், மதுரைக்குத் தென்கிழக்கே வைகை ஆற்றங்கரையில் அமைந்துள்ளது.

**37. (B) கூற்று [A], காரணம் [R] இரண்டும் சரி, காரணம் [R] கூற்றை [A] சரியாக மெய்ப்பிக்கிறது**

சங்க இலக்கியங்கள் இரும்புக் கொல்லர்களைக் குறிப்பிடுகின்றன; கொடுமணல், குட்டூர் அகழாய்வுகளில் கிடைத்த இரும்பு உருக்கு உலைகள் இதனை உறுதிப்படுத்துகின்றன.

**38. (B) பெர்லின்**

1876-ல் ஜெர்மானிய ஆய்வாளர் ஆண்ட்ரியாஸ் ஃபெடார் ஜாகர் ஆதிச்சநல்லூரில் சேகரித்த பொருட்கள் பெர்லின் அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளன.

**39. (B) 4 3 1 2**

கீழடியில் உறை கிணறுகள், அழகன்குளத்தில் ரோமானிய நாணயங்கள், வெம்பக்கோட்டையில் ஏராளமான சங்கு வளையல்கள் கிடைத்தன; இவற்றுக்குப் பொருந்தும் ஒரே விடை 4 3 1 2 ஆகும்.

**40. (C) (i) மற்றும் (ii) மட்டும் சரி**

பிரம்மகிரியில் அசோகரின் சிறு பாறைக் கல்வெட்டு உள்ளது; சின்னமனூர் செப்பேடு தலையாலங்கானத்துப் போரை வென்ற நெடுஞ்செழியனைக் குறிப்பிடுகிறது. திருக்கோவிலூர் கல்வெட்டு கபிலர் உயிர் நீத்ததைக் குறிப்பிடுகிறது, ஔவையை அல்ல; கன்னட நாட்டில் கி.பி. 10-ஆம் நூற்றாண்டுக்கு முன்பே வீரக்கற்கள் உள்ளன.

**41. (A) 4 2 1 3**

பல்லாவரம் சென்னையிலும், கம்பர்மேடு தஞ்சாவூர் பகுதியிலும், மல்லபாடி தர்மபுரி (கிருஷ்ணகிரி) பகுதியிலும், கொடுமணல் ஈரோடு மாவட்டத்திலும் உள்ளன.

**42. (D) 4 3 2 1**

அழகன்குளம் இராமநாதபுரம், வசவசமுத்திரம் காஞ்சிபுரம் (தற்போது செங்கல்பட்டு), கொடுமணல் ஈரோடு, கீழடி சிவகங்கை மாவட்டங்களில் உள்ளன.

**43. (B) (1) மற்றும் (3) சரி**

பதிற்றுப்பத்து 'கொடுமணம்' என இவ்வூரைக் குறிப்பிடுகிறது; இது ஈரோடு மாவட்டத்தில் உள்ளது, திருச்சி அருகில் அல்ல. இங்குப் பெருங்கற்கால ஈமச்சின்னங்கள், மணிகள், சங்குப் பொருட்கள் கிடைத்துள்ளன.

**44. (B) இராபர்ட் புரூஸ் புட்**

1863-ல் இராபர்ட் புரூஸ் ஃபூட் பல்லாவரத்தில் பழங்கற்காலக் கைக்கோடரியைக் கண்டெடுத்து, தமிழகத்தின் தொன்மையை உலகிற்கு அறிவித்தார்.

**45. (A) 2 4 1 3**

பூம்புகார் – நடன காசிநாதன், வெள்ளலூர் – பூங்குன்றன், கொடுமணல் – சுப்பராயலு (தமிழ்ப் பல்கலைக்கழகம்), கரூர் – இரா. நாகசாமி (1973) ஆகியோர் அகழாய்வை நடத்தினர்.

**46.** **(C) (2), (3) மற்றும் (4) சரி**

திருமுக்கூடல் கல்வெட்டு வீரராஜேந்திரனுடையது, திருவாலங்காடு செப்பேடு முதலாம் ராஜேந்திரனுடையது, உத்திரமேரூர் குடவோலைக் கல்வெட்டுகள் முதலாம் பராந்தகனுடையவை; இம்மூன்றையும் கொண்ட ஒரே விடை (C).

**47.** **(B) (2) மட்டும்**

பட்டணம் கேரள மாநிலத்தில் (முசிறி அருகே) உள்ள தொல்லியல் தளம்; தமிழ்நாட்டில் இல்லை. வசவசமுத்திரம், காவிரிப்பூம்பட்டினம், கொடுமணல் ஆகியவை தமிழ்நாட்டில் உள்ளன.

**48.** **(A) [A] சரி ஆனால் [R] தவறு**

கீழடி அகழாய்வின் அறிவியல் காலக்கணிப்பு தமிழ் பிராமி எழுத்தை கி.மு. 6 ஆம் நூற்றாண்டுக்குக் கொண்டு செல்வதால் கூற்று சரி. பொருந்தல், கொடுமணல் தேதிகள் கி.மு. 5 ஆம் நூற்றாண்டையே காட்டுகின்றன; எனவே காரணம் தவறு.

**49.** **(A) (4) மட்டும்**

ராபர்ட் புரூஸ் புட் பல்லாவரத்தில் கற்கருவியைக் கண்டவர்; ஜாகர் ஜெர்மானிய இனவியலாளர், இராணுவப் பொறியாளர் அல்லர். ஸ்டுவர்ட் ஆட்சியர் என்பது மட்டுமே சரியான இணை.

**50.** **(A) இளம் கடுங்கோ**

புகளூர் ஆறுநாட்டார்மலை தமிழ் பிராமி கல்வெட்டுகள் சேர மன்னன் இளங்கடுங்கோ சமணத் துறவிக்குக் கற்படுக்கை அமைத்துக் கொடுத்ததைக் குறிப்பிடுகின்றன.

**51.** **(A) [A] மற்றும் [R] ஆகிய இரண்டும் சரி மற்றும் [R] என்பது [A] விற்குச் சரியான விளக்கமாகும்**

அரிக்கமேட்டில் கிடைத்த ரோமானிய நாணயங்கள், மட்பாண்டங்கள் (அரிட்டைன், ஆம்போரா) கி.பி. தொடக்க நூற்றாண்டுகளில் இந்தியா–ரோம் கடல் வணிகம் நடந்ததற்குச் சான்று; எனவே [R] என்பது [A]-க்குச் சரியான விளக்கம்.

**52.** **(B) 2 4 1 3**

ஆனமலை – புதைவகை மற்றும் புதைப்பொருட்கள்; திருத்தங்கல் – பெருங்கற்கால, நுண்கற்காலப் பொருட்கள்; கன்னனூர் – நீர்ப்பாசனக் கட்டுமானம்; கோவலன்பொட்டல் – மதுரையில் பெருங்கற்காலப் பண்பாடு.

**53.** **(C) (a) மற்றும் (c) சரி**

காவிரி டெல்டாவை ஆண்டு உறையூரைத் தலைநகராகக் கொண்டவர்கள் சோழர்கள், சேரர்கள் அல்லர். சங்க காலம் இரும்புக் காலத்தில் வேரூன்றியது; எனவே (a), (c) மட்டுமே சரி.

**54.** **(D) (1) மற்றும் (2) சரி**

கீழடிப் பானையோடுகளில் தமிழி எழுத்துகள் உள்ளன. அவை பெரும்பாலும் பானை உலர்ந்து சுட்ட பின் பயனர்களால் கீறப்பட்டவை; இது சாதாரண மக்களிடையே பரவலான எழுத்தறிவைக் காட்டுகிறது.

**55.** **(D) (1) மற்றும் (2) சரி**

அரிக்கமேடு புதுச்சேரிக்குத் தெற்கே சுமார் 4 கி.மீ. (2.5 மைல்) தொலைவில் உள்ளது. 1945-இல் மார்டிமர் வீலர் இங்கு அறிவியல் முறையில் அகழாய்வு நடத்தினார்.